**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 03-ம் நாள் புதன்கிழமை

**CC.No. 192/2019**

**C.N.R.No: TNDG18-000538-2019**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Athoor. |
| 2. | Name of the Judge | Thiru. S. Anbuthasan, B.Com., B.L. |
| 3 | Date of Judgment | 03.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.No. 192/2019<br>C.N.R.No: TNDG18-000538-2019 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police, Sempatti- **Complainant** |
| | | **Accused –** Karthikeyan |
| 6. | Date of Occurence | 01.04.2018 |
| 7. | Date of Complaint | 01.04.2018 |
| 8. | Date of Arrest if any and remand | -- |
| 9. | Period of Remand of the Accused | -- |
| 10. | Date if release on bail | AB(Crmp.No.2786/18-Dt. 11.04.2018) |
| 11. | Date of Final Report | 11.05.2018 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | -- |
| 13. | Date of Questioning of the accused U/s. 240 CrPC | 09.03.2026 |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the witnesses | |

| Witnesses | Chief | Cross |
|---|---|---|
| PW 1 | 16.03.2026 | 16.03.2026 |
| PW 2 | 16.03.2026 | 16.03.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW 3 | 22.05.2026 | 22.05.2026 |
| | | PW 4 | 26.05.2026 | 26.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code | -- | | |
| 16. | Date of Examination of the Accused U/s. 313 CrPC | 09.03.2026 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil | | |
| 18. | Grant of Stay by Superior courts and the results there of | -- | | |
| 19. | Date of Commencement of Trial | 09.03.2026 | | |
| 20. | Date of Closure of Trial | 03.06.2026 | | |
| 21. | Date of Sentence of Order | 03.06.2026 | | |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | Does not arise | | |
| 23. | If any delay, give Explanation | -- | | |

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
செம்பட்டி காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண். 118/2018 ..... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

கார்த்திகேயன்
த.பெ. வெற்றிவேல்,
96, பாரதி நகர், பெரியகருப்பன் ரோடு,
சிவகாசி, விருதுநகர். ..... குற்றம் சாட்டப்பட்டவர்

இவ்வழக்கானது கடந்த 11.12.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டு,

14.12.2018 அன்று குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.II–ல் CC 634/2018 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வந்த நிலையில், நீதிமன்ற அதிகார வரம்பெல்லை காரணமாக மேற்படி வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு CC.NO. 192/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்த நீதிமன்றத்தின் முன் 26.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் உதவி குற்றவியல் வழக்கறிஞர் திரு.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.ராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகிய நிலையில், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் சீரிய மேற்பார்வையில் நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு, இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :

i. கடந்த 31.03.2018–ம் தேதி இரவு 12.45 மணிக்கு வாதியின் தாய் முனியம்மாளும், தந்தை சின்னச்சாமியும் பாறைப்பட்டி கிராமம் ராமநாதபுரத்தில் உள்ள தங்களது டீக்கடையில் வியாபாரத்தை முடித்து விட்டு டீ கடையில் படுத்து தூங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது செம்பட்டி To ஒட்டன்சத்திரம் ரோட்டில் தெற்கு இருந்து வடக்கு நோக்கி TN 30 BE 4705 என்ற எண்ணுள்ள ஈச்சர் லாரியை அதன் ஓட்டுனரான எதிரி கார்த்திக்கேயன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து வாதியின் டீக்கடைக்குள் லாரியானது புகுந்துள்ளது. மேற்படி எதிரி டீக்கடைக்குள் தூங்கிக் கொண்டு இருந்த வாதியின் தாயார் வலது காலில் லாரி ஏறி பலத்த ரத்த காயமும் மற்றும் ஊமைக்காயம் ஏற்பட்டு உயிர் இழக்கும் படியாக செய்துள்ளார். மேலும் முனியம்மாளின் கடையும் அதில் இருந்த மொத்தம் ரூ.10,000/– மதிப்புள்ள பொருட்களும் சேதத்தை ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இதச

சட்டபிரிவுகள் 279, 304(A) –ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக செம்பட்டி காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்டவர் மீது சட்டப்பிரிவு **173(2) Cr.P.C–** படி இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

ii. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 24.09.2019 அன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரி பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு சட்டபிரிவு **207 Cr.P.C** சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

iii. குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்க போதிய சந்தர்ப்பமும் காலமும் வழங்கப்பட்டு, இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரிடம் இருந்து **இதச சட்டபிரிவுகள் 279, 304(A)–ன் கீழ்** குற்றச்சாட்டுக்கள் வனைந்து சட்டப்பிரிவு **251 Cr.P.C – இன் கீழ்** மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்தார்.

iv. அரசுத் தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் குறிப்பிடப்பட்டன. அ.சா.1 புகார் மனு கொடுத்தவர் ஆவார். இவ்வழக்கில் 2 மற்றும் 4 பட்டியல் சாட்சிகள் இறந்துவிட்டதாக இறப்புச் சான்றிதழ்கள் பெறப்பட்டதால் அவர்களை இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை. 3, 6, 8 **முதல் 11** வரையிலான மற்ற பட்டியல் சாட்சிகளை அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களால் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான

பட்டியல் சாட்சி 12 திரு. G.செந்தில்குமார் அவர்கள் பணியிட மாறுதலாகி சென்றுவிட்ட காரணத்தினால், ஆவணங்கள் அடிப்படையில் அ.சா.4 திரு.ஷேக் அப்துல்லா செம்பட்டி சார்பு ஆய்வாளர் என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(2) <u>அரசுத் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>

i. அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "வாகன விபத்தில் இறந்துபோன முனியம்மாள் தனது தாயார். காயம்பட்ட சின்னச்சாமி தனது தகப்பனார். கடந்த 03.04.2018-ம் தேதி சுமார் இரவு 12.00 மணியளவில் தனது தாயார் மற்றும் தகப்பனார் ஒட்டன்சத்திரம்-செம்பட்டி மெயின் ரோட்டில் ராமநாதபுரத்தில் மெயின்ரோட்டின் வலது பக்கத்தில் அவர்களது டீ கடையில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். நான் சம்பவம் நடந்த அன்றையதினம் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 100 மீட்டர் தொலைவில் இருந்த பகவதி அம்மன் கோவிலில் தூங்கிக்கொண்டிருந்தேன். அதிவேகமாக செம்பட்டியிலிருந்து ஒட்டன்சத்திரம் நோக்கி சென்ற Eicher வாகனம் கடைக்கு அருகில் 10 மீட்டர் அருகில் இருந்த சிறிய டேங்க் மற்றும் போஸ்ட்டில் மோதி பிறகு டீ கடையில் தூங்கிக்கொண்டிருந்த தனது தாயார் மற்றும் தகப்பனார் மீது மோதியதில் தனது தாயாருக்கு உடம்பு முழுவதும் பலத்த காயமும், தகப்பனாருக்கு லேசான ஊமைக்காயம் இருந்தது. அப்போது கடை முழுவதும் விபத்தால் சேதம் அடைந்தது. சேத மதிப்பு சுமார் ரூ.2,00,000/- இருக்கும். தான் சம்பவத்தை பார்க்கவில்லை. ஆனால் உடனே சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். Eicher வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அந்த இடத்தில் இல்லை, நான் பார்க்கவில்லை. தனது தாயார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். தகப்பனார் சிகிச்சை பெற்றுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார். புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது" என சாட்சியமளித்துள்ளார்.

ii. அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " கடந்த 2018 ம் வருடம் ஒரு நாள் இரவு 12.00 மணிக்கு மேல் ராமநாதபுரத்தில் கோவில் அருகே உள்ள நாடக மேடையில் படுத்து தூங்கிக்கொண்டிருந்தபோது டமார் என்று சத்தம் கேட்டது. நான் எழுந்து பார்த்தபோது ராமநாதபுரம் மெயின் ரோட்டின் வடக்கு பக்கத்தில் அவரது டீ கடையில் முனியம்மாள் தரையிலும், சின்னச்சாமி டேபிள் மேலும் படுத்திருந்தபோது Eicher நான்கு சக்கர வாகனம் அருகில் இருந்த Syntex மீது மோதி அதிலிருந்து அவர்களது டீ கடைக்குள் சென்று அங்கிருந்த முனியம்மாளுக்கு இரண்டு கால்களிலும் சேதம் ஏற்பட்டிருந்தது. சின்னச்சாமிக்கு ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது. அப்போது Eicher வண்டி நின்றுகொண்டிருந்தது. ஆனால் அந்த ஓட்டுநர் அந்த இடத்தில் இல்லை. சின்னச்சாமிக்கு லேசான காயம் இருந்ததால் அங்கிருந்து விடுவிப்பு செய்யப்பட்டார். காயம்பட்ட முனியம்மாளை சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்" என சாட்சியமளித்துள்ளார்.

iii) பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் "தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2/PW.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒட்டன்சத்திரத்திலிருந்து செம்பட்டி வரும் ரோட்டில் ராமநாதபுரத்தில் சின்னசாமி டீக்கடையில் வந்து செம்பட்டி, காவல் உதவி ஆய்வாளர் ஏற்கனவே தட்டச்சு செய்த பேப்பரில் என்னிடம் கையொப்பம் கேட்டார்" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அரசு தரப்பு கூடுதல் சாட்சியாக செம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் அ.சா.4

ஆக விசாரிக்கப்பட்டார்.

v) கூடுதல் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு. செந்தில்குமார் காவல் ஆய்வாளர் அவர்கள் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால், ஆவணங்களின் அடிப்படையில் தான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 01.04.2018 ஆம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.சேகர் அவர்கள் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், சம்பவ இடம் சென்று, சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும், அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் சேகரித்தும், பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்கள் அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை சேகரித்தும், LW1 முதல் LW11 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் எதிரி மீது குற்றம் புலனானதால் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

vi. அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள மேற்படி குற்றத்திற்கு உட்படுத்தக்கூடிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு 313(1)(b) Cr.P.C–இன் கீழ் விளக்கி வினவியபோது, குற்றம் சாட்டப்பட்டவர் பொய்வழக்கு என்று மறுத்துக் கூறினார். குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவியபோது குற்றம்சாட்டப்பட்டவர் தனது தரப்பில் சாட்சிகள் இல்லையென்று கூறினர். எனவே குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் இல்லையென்று குற்றம்

சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞரால் மேலொப்பம் செய்யப்பட்டதன் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டது.

3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்?

**குற்றம் சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 279, 304(A)– ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா**?" என்பதேயாகும்.

4. <u>தீர்வு</u>

i. மேற்கூறிய வழக்குகளை ஆராய்ந்து பார்க்கும்போது புகார் மனுவைச் (First Information) சார்ந்தே அ.சா.ஆ.3 அச்சு படிவ முதல் தகவல் அறிக்கை (Printed First Information Report) இதச சட்டபிரிவுகள் 279, 337 என பதிவு செய்யப்பட்டு, இறுதியறிக்கை இதச சட்டப்பிரிவு 279, 304(A) ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii. அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில் "**வாகன விபத்தில் இறந்துபோன முனியம்மாள் தனது தாயார் மற்றும் காயம்பட்ட சின்னச்சாமி தனது தகப்பனார் என்றும், கடந்த 03.04.2018–ம் தேதி சுமார் 12.00 மணியளவில் தனது தாயாரும், தகப்பனாரும் ஒட்டன்சத்திரம்–செம்பட்டி மெயின் ரோட்டில் ராமநாதபுரத்தில் மெயின் ரோட்டின் வலது பக்கத்தில் அவர்களது டீ கடையில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். தான் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 100 மீட்டர் தொலைவில் இருந்த பகவதி அம்மன் கோவிலில் தூங்கிக்கொண்டிருந்தேன். நான் சம்பவத்தை பார்க்கவில்லை. Eicher வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அந்த இடத்தில் இல்லை, நான் பார்க்கவில்லை"** என்றும், அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், "**எதிரியை பற்றிய விபரம் போலிசார் சொல்லி தான் தெரியும்**

**என்றால் சரிதான். புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று தேதி புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உங்கள் கடைக்கு என்ன சேத மதிப்பு ஏற்பட்டது என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்**" என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.1–ன் சாட்சியம் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை முழுமையாக ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லை என்றும் பின்னிட்ட தொடர்புடைய சாட்சி மட்டுமே என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் அ.சா.1 ன் சாட்சி அரசு தரப்பு வழக்கை முழுமையாக ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iii) அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் "**கடந்த 2018–ம் வருடம் ஒரு நாள் 12.00 மணிக்கு மேல் ராமநாதபுரத்தில் கோவில் அருகே உள்ள நாடக மேடையில் படுத்து துாங்கிக்கொண்டிருந்தபோது டமார் என்று சத்தம் கேட்டது. நான் எழுந்துபார்த்தபோது முனியம்மாளுக்கு இரண்டு கால்களிலும் சேதம் ஏற்பட்டிருந்தது. சின்னச்சாமிக்கு ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது.**" என்றும், அ.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில், "**சம்பவத்தை பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எதிரியின் பெயர் விபரம் பற்றி தெரியாது என்றால் சரிதான்**" என்று சாட்சியம் அளித்துள்ளார், அ.சா.2 சாட்சியத்தின் மூலம் யார் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளிக்கவில்லை. யாருடைய அஜாக்கிரதையான அல்லது அதிவேகமான செயலால் வாகன விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. ரோட்டின் எந்த புரத்தில் செல்லும்போது இந்த வாகன விபத்து நடந்தது என்று அ.சா.2 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அ.சா.2 ன் சாட்சி அரசு தரப்பு வழக்கை முழுமையாக ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அ.சா.2–ன் சாட்சியத்தை வைத்து மட்டும் இந்த குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

v) பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில், **"இந்த வழக்கு சம்பந்தமாக தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான்"** பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 இவ்வழக்கிற்கு பின்னிட்ட சாட்சி என்றும், மேற்படி அ.சா.3–ன் சாட்சியத்தை வைத்து மட்டும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் அதிவேகமான மற்றும் அஜாக்கிரதையான செயலால் தான் இந்த வாகன விபத்து நடந்தது என்று அறுதியிட்டு கூற இயலாது என்று தீர்மானித்து அ.சா.3–ன் சாட்சியமானது இவ்வழக்கு சம்பவத்திற்கு ஒரு தொடர்புடைய சாட்சியம் மட்டுமே ஆகும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

viii) கூடுதல் சாட்சியான அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளது, ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே என்றும், அவர் இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லை என்பதாலும், அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்ததை மட்டும் வைத்து இவ்வழக்கில் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ix. அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள இவ்வழக்கின் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது .

x. **முடிவாக**, குற்றஞ்சாட்டப்பட்டவரின் அஜாக்கிரதையான அல்லது அதிவேகமான செயலால் தான் இவ்வழக்கில் சொல்லப்பட்ட வாகன விபத்து ஏற்பட்டது என்று அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் இல்லாததாலும், அரசுத் தரப்பு சாட்சிகள் இக்குற்றச்சாட்டுக்களின் சட்ட உட்கூறுகளுக்கு உட்பட்டு நீதிமன்ற சாட்சியம் அளிக்காததாலும், கூடுதல் சாட்சியான அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட அலுவல் சாட்சி இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லையென்றும், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளித்திருப்பதால், கூடுதல் சாட்சியான அ.சா.4 சாட்சியம் அளித்ததை மட்டுமே வைத்து இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும், முடிவாக, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி இல்லை என முடிவு செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, இவ்வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

xi. இறுதியாக, இவ்வழக்கின் **குற்றம் சாட்டப்பட்டவர் இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குற்றம் சாட்டப்பட்டவரை குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை** செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

xii. இவ்வழக்கின் தன்மையை கருதி, பிரிவு 357–A(1) குவிமுசவின் படி இவ்வழக்கில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவிற்கு இழப்பீட்டிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 03 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 15:52:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

**அரசுத் தரப்புச் சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சஞ்சீவி (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. தெய்வம் ( பட்டியல் சாட்சி) |
| அ.சா.3 | திரு. செந்தில்முருகன் (பார்வைமகசர் சாட்சி) |
| அ.சா.4 | திரு. ஷேக் அப்துல்லா (கூடுதல் சாட்சி–1) |

**Judicial Form No : 68**

| Sl.No. | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 16.03.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | 22.05.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 26.05.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 26.05.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 26.05.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6. | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை | 26.05.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |
| 7. | சட்டபிரிவு நீக்கல் அறிக்கை | 26.05.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.4 | அசல் |
| 8. | பிரேத விசாரணை அறிக்கை | 26.05.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.4 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | பிரேத பரிசோதனை அறிக்கை | 26.05.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.4 | அசல் |
| 10 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | 26.05.2026 | அ.சா.ஆ.10 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள் –**

இல்லை

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்**

இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 15:52:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

குறிப்பு:–

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2) சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3) தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.